# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 30.10.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சென்ற குத்பாவில் அல்லாஹ்வின் **வலி** என்ற பண்பு குறித்து சில வசனங்களைக் கொண்டு விளக்கினேன். மேலும் அகராதியில் கூறப்பட்ட பொருள்கள் பற்றியும் விளக்கினேன். நான் எடுத்துரைத்த வசனங்களுள் சிலவற்றையும் விளக்கினேன். சில வசனங்கள் இன்னும் எஞ்சியுள்ளன. அவற்றில் ஒரு வசனத்தையும் மேலும் சில வசனங்களையும் இன்று நான் விளக்குவேன்.

அல்லாஹ் **வலி** மற்றும் **மவ்**லா –வாக இருக்கிறான் என்பது குறித்து திருக்குர்ஆனில் பல இடங்களில் வருகிறது. எல்லா வசனங்களையும் விளக்க முடியாது. அவற்றுள் சிலவற்றை விளக்குவேன்.

இந்த விளக்கங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய தஃப்ஸீரின் ஒளியில் இருக்கும்.

அல்லாஹ் மூஃமின்கள் மற்றும் மூஃமின் அல்லாதவர் இரு தரப்பாருக்கும் தனது பண்பின் மூலம் கவனமூட்டியுள்ளான். காஃபிர்களை எச்சரித்தும் உள்ளான்.

**சூரா ரஅத்தின் 12 -வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

**லஹு முஅக்கிபா[த்]தும் மிம்பய்னி யதய்ஹி வமின் ஹல்ஃபிஹீ யஹ்ஃபலூனஹு மின் அம்ரில்லாஹ். இன்னல்லாஹ லாயுகைய்யுரு மாகவ்மின் ஹத்தா யுகைய்யிரூ மாபிஅன்ஃபுஸிஹிம். வஇஸா அராதல்லாஹு பிகவ்மின் ஸுஅன் ஃபலா மத்தலஹு வமாலஹும் மின்தூனிஹீ மிவ்வால்.**

பொருள்: அவனிடமிருந்து இ(த்தூது)வருக்கு முன்னாலும், இவருக்குப் பின்னாலும் (ஒருவரையொருவர்) தொடர்ந்து வரக்கூடிய (மலக்குகளின்) ஒரு குழுவினர் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையினால் இவரைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர். எந்தச் சமுதாயத்தினரும் தங்கள் அகநிலையை மாற்றிக் கொள்ளாத வரை, அல்லாஹ் ஒருபோதும் அவர்களின் நிலையினை மாற்றுவதில்லை. அல்லாஹ் ஒரு சமூாயத்தினருக்கு தண்டனையளிக்க முடிவு செய்து விட்டால் அதனை அகற்றுபவர் எவருமில்லை. அவனையன்றி அவர்களுக்கு உதவி செய்பவரும் எவருமில்லை. (13:12)

இந்த வசனத்தில் அல்லாஹ் நான்கு விஷயங்களைக் கூறுகிறான். முதலாவது, ஒவ்வொருவரின் பாதுகாப்பையும் இறைவன் தன் கையில் வைத்துள்ளான். இரண்டாவது, ஒரு சமுதாயத்தின் செயல்களை வைத்து அவர்களுக்கு என்ன முடிவைத் தர வேண்டும் என்று அல்லாஹ் தீர்மானிக்கின்றான். மூன்றாவது, அல்லாஹ் ஒருவருக்கு தண்டனை கொடுக்க முடிவு செய்து விட்டால் பிறகு அதனை எவராலும் தடுத்துவிட இயலாது. பிறகு அல்லாஹ்வே ஒருவருக்கு நண்பனும், பாதுகாவலனும், கண்காணிப்பவனும் ஆவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த **லஹு முஅக்கிபா[த்]தும் மிம்பய்னி யதய்ஹி வமின் ஹல்ஃபிஹீ யஹ்ஃபலூனஹு மின் அம்ரில்லாஹ்** என்ற வசனத்தைக் குறித்துக் குறிப்பிடுகின்றார்கள்.

அல்லாஹ்வின் தரப்பிலிருந்து பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதுகாக்கின்றனர். இந்த பாதுகாப்பு அல்லாஹ்வின் தூய நல்லடியார்கள் எல்லாரையும் விட முதலில் (ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது.)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றிய பிறகு அல்லாஹ்விடம் ஒருவருக்கு பேரன்பு இருந்ததென்றால் அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது மட்டும்தான். பிறப்பிலிருந்து இறப்பு வரை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்சொன்ன இந்த பாதுகாப்பை முழுமையாக வழங்கினான். இதற்கு ஈடிணையே இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தஃப்ஸீரில் கூறுகின்றார்கள்:**

**லஹு^ முஅக்கிபா[த்]துன்** என்பதில் லஹு என்ற பிரதிப்பெயர்ச்சொல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையே குறிக்கும். அவருக்கே இறைவனது பாதுகாப்பு சிறப்பாக இருந்ததை நாம் காண முடிகிறது. மக்காவில் அவர்கள் வாழ்ந்த போது எப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களைப் பாதுகாத்து வந்தான் என்பது தெள்ளத் தெளிவாக ஒவ்வொருவரும் அறிந்ததே.

சூரா ரஅத்தின் 12 வது வசனத்தை நான் ஓதினேன். அந்த வசனம் மக்காவில் இறங்கியது. ஆனால் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப அந்த ஆபத்தான நிலையிலும் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தான்.

எதிரிகள் எந்த நோக்கத்தை நிறைவேற்றி விட விரும்பினார்களோ அதில் வெற்றி பெற முடிந்ததில்லை. பத்ருடைய மைதானத்தில் இறைவனின் சிறப்புமிகு பாதுகாப்பை நாம் காண்கிறோம்.

அறிவிப்பில் வருகிறது. ஆமிர் இப்னு துபைல் ஒரு கோத்திரத்தின் தலைவர் ஆவார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன் வந்து, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் எனக்கு கிலாஃபத் கிடைக்குமா என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த நிபந்தனை விதிப்பவருக்கு ஒருபோதும் கிலாஃபத் கிடைக்காது என்று கூறினார்கள். உடனே அம்மனிதர் மிகவும் கோபம் கொண்டார். நீர் எப்போதும் நினைவில் வைத்திருக்கத்தக்க ஒரு பாடத்தை நான் உமக்கு புகட்டுவேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், உமக்கு ஒருபோதும் இறைவன் (அத்தகைய) வாய்ப்பளிக்கவே மாட்டான் என்று கூறினார்கள்.

உடனே அம்மனிதர் கோபத்துடன் தன் கூட வந்த மனிதருடன் திரும்பிச் சென்று விட்டார். செல்லும் வழியில் அவர் கூட வந்தவர், வாருங்கள்! நான் முஹம்மத் (ஸல்) அவர்களுடன் பேச்சுக் கொடுக்கிறேன். நீர் அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொணடு வாளால் காரியத்தை முடித்து விடும் என்றும், இந்தத் திட்டம் எனக்கு இப்போது உதித்தது என்றும் கூறினார். ஆனால் ஆமிர் நல்ல புத்திசாலியாக இருந்தான். அது பெரிய ஆபத்தாகும். முஹம்மது (ஸல்) அவர்களின் கூட இருப்பவர்கள் அதற்குப் பிறகு நம்மை கொலை செய்து விடுவார்கள் என்று ஆமிர் கூறினார். கூட வந்தவனோ மிகப் பெரும் **ஷ**ய்த்தானாக இருந்தான். அவன் ஆமிரிடம், அவ்வாறு முஹம்மது (ஸல்) அவர்களின் கூட இருப்பவர்கள் நம்மை கொல்ல வந்தால், நாம் ந**ஷ்**ட ஈடு கொடுத்து சமாளித்துக் கொள்ளலாம் என்று கூறினான். அவ்வாறே செய்து விடலாம் என்று ஆமிரும் ஒப்புக் கொண்டு விட்டான். ஆனால் அதன் பிறகும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதுள்ள பயத்தால் அவனது கை அப்படியே நின்று விட்டது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தக் காட்சியைக் கண்டார்கள். ஒருபுறம் கையில் வாளுடன் ஒருவர் நிற்கிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனது நோக்கத்தைப் புரிந்து கொண்டவர்களாக மறுபுறம் சென்று விட்டார்கள். அவ்விருவரும் தாம் வந்த நோக்கத்தை மறைத்துக் கொண்டு மௌனமாக திரும்பி விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஒன்றும் கூறவில்லை. ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாத்தான். அந்த இருவரையும் பின்னாட்களில் பழிவாங்கவும் செய்தான்.

ஆமிருடன் கூட வந்தவன் வழியிலேயே மின்னல் தாக்கி உயிரிழந்தான். ஆமிருக்கு ஏற்பட்ட முடிவு குறித்து ஒரு நோயினால் மரணித்து விட்டான் என்று வருகிறது. இவ்வாறு பல்வேறு நேரங்களில் அவர்கள் பாதுகாக்கப்பட்ட சம்பவங்கள் நமக்கு கிடைக்கின்றன. பிறகு அவர்களின் முழு வாழ்விலும் இத்தகைய சம்பவங்கள் காணப்படுகின்றன. இதில் இறைவனின் சிறப்பான ஒரு பாதுகாப்பு மலக்குகளின் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது.

எனவே அல்லாஹ் மக்காவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வாக்குறுதி அளித்தான். பிறகு மீண்டும் அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக மதீனாவில் அதனை நினைவூட்டினான்.

அல்லாஹ் கூறுகின்றான்: **வல்லாஹு யஃஸிமுக மினன்னாஸ்** – மேலும் அல்லாஹ் உம்மை மனிதர்களிடமிருந்து காப்பாற்றுவான். (5:68)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்தவொரு மனிதனின் கையாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொலை செய்யப்படாமல் இருந்தது மிகப்பெரும் அற்புதமாகும். திருக்குர்ஆனின் உண்மைக்கு ஓர் ஆதாரமாகும். ஏனெனில் திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து **வல்லாஹு யஃஸிமுக மினன்னாஸ் (5:68)** என்று கூறுகிறது. முந்தைய வேதங்களிலும், பிற்காலத்தில் வரக்கூடிய ஒரு நபி எவர் கையாலும் கொலை செய்யப்பட முடியாதவராக இருப்பார் என கூறப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மலக்குகள் மட்டுமின்றி மிக நெருக்கமான தூய சஹாபாக்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் முன்னும் பின்னும் இருந்து அன்னாருக்கு ஒத்தாசையாக சண்டையிடுவோம் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் வழங்கிய உறுதிமொழியையும் நிறைவேற்றினார்கள்.

அல்லாஹ்வுடைய கட்டளையினால் சஹாபாக்கள் உதவிபுரிந்தார்கள். அல்லாஹ் கூறினான்: **மின் அம்ரில்லாஹ்** – அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையினால் பாதுகாப்பு வழங்குபவர்களாவர். ஒருபுறம் மலக்குகள் இறை கட்டளையால் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி வந்தார்கள். மறுபுறம் அவர்களுக்காக எல்லா வகையான தியாகமும் செய்வதற்காக சஹாபாக்கள் எந்நேரமும் தயாராக இருந்தனர்.

சஹாபாக்களின் ஈமானின் காரணமாக அந்த உறுதிப்பாடு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக சஹாபாக்களின் உள்ளத்தில் நிலைநாட்டப்பட்டிருந்தது.

சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எந்த இனம், சமூகப் பற்றின் காரணத்தாலும் உதவி செய்யவில்லை. அல்லது நட்பின் காரணத்தாலோ அல்லது கட்டாயத்தின் காரணமாகவோ உதவி செய்யவில்லை.

ஏனெனில் சிலவேளை ஒருவருக்கு இன்னொருவரின் மீது கொண்ட பகைமையின் காரணத்தால், அவரது பகைவரை நண்பராக ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் இதுபோன்ற காழ்ப்புணர்ச்சியாலோ பிடிவாதத்தாலோ மக்களை எதிர்க்கத் துணியவில்லை. அல்லது அரசின் மீது கொண்ட ஏதாவது ஒரு பயம் அவர்களை அவ்வாறு செய்யுமாறு தூண்டவும் இல்லை. மாறாக சஹாபாக்களின் உள்ளத்தில் இறைவன் உருவாக்கியிருந்த ஈமானின் காரணத்தால் இறைவனின் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக அன்னாரை பாதுகாப்பதற்காக நின்றார்கள். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதற்காக இறைவன் மிகப்பெரும் ஏற்பாட்டை செய்திருந்தான். ஆனால் இதற்கு இன்னொரு பொருள், ஒவ்வொரு மனிதனுக்கும் கூட பொருந்தவே செய்கிறது. ஒவ்வொரு மனிதனின் பாதுகாப்புக்கும் கூட அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். உலகில் பரவியுள்ள பல நோய் பரப்பும் கிருமிகள் மனிதன் எவ்வளவுதான் சுத்தமாக இருப்பினும் மனிதனின் சுவாசக் காற்றின் மூலம் உட்புகுந்து விடுகின்றன. ஆனால் மனிதனுக்குள் ஓர் தற்காப்பு ஏற்பாட்டை அல்லாஹ் வைத்துள்ளான். அது மனித உடம்பினுள் தீய தாக்குதல் நடத்துவதை தடுக்கின்றன. அதுவன்றி தனது சிறப்பான 'வலி' மார்களுக்கு ஓர் அடையாளமாக தனது மலக்குகளாகிய காவலர்கள் மூலம் பாதுகாப்பு வழங்குகின்றான். அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கு மட்டும் இந்த பாதுகாப்பு கிடைப்பதில்லை. மாறாக, அந்த நல்லடியார்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கின்றது.

இக்காலத்திலும் நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஓர் அடையாளமாக இறைவன் பிளேக் நோயை ஏற்படுத்தினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அவர்களை உண்மையாகப் பின்பற்றியவர்கள் பாதுகாக்கப்படுவர் என்று வாக்குறுதி அளித்தான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கிஷ்தி நூஹ் -ல் அதைப்பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:**

மிகவும் பணிவன்புடன் இந்த உபகாரமிக்க அரசிடம் கூறிக் கொள்கிறோம். நமக்காக வானத்தின் ஒரு தடை மட்டும் இல்லாதிருப்பின் எல்லாரையும் விட முதலில் நாம் தடுப்பூசி போட்டுக் கொண்டிருப்போம். வானத்தின் தடை என்பது இக்காலத்தில் மக்களுக்கு அல்லாஹ் ஒரு கருணையின் அடையாளத்தை காட்ட விரும்பினான். இறைவன் அதன் காரணத்தால்தான் என்னைக் குறித்துக் கூறினான். உன்னையும் உனது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளும் இருப்பவர்களை – அதாவது உம்மை முழுமையாகப் பின்பற்றி தக்வாவின் உயிர் சத்தாக எவர்கள் மாறி விடுவார்களோ அவர்களை நாம் பாதுகாப்போம். அது இந்த கடைசி காலத்தில் இறைவனது ஓர் அடையாளமாக விளங்கும்.

இறைவனது இருப்புக்கு பெரும் சான்றாக அந்நோய் விளங்கியது. மிகப்பரந்த அளவில் 5–6 ஆண்டுகள் அந்நோய் மக்களை வாட்டி வதைத்தது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் பாதுகாப்பாக இருந்தனர். பிறகு நோய் மட்டுமல்லாமல் இன்னும் பிற அதிர்ச்சிகள் மனிதனைப் பிடிக்கின்றன. பொருள், குழந்தைகள், கண்ணியம் ஆகியவற்றிற்கு நஷ்டம் ஏற்படுகிறது. அப்போதும் அல்லாஹ் அதனை சகித்துக் கொள்ளும் ஆற்றலை மனிதனுக்கு வழங்குகிறான். இறைவன் அவ்வாறு சக்தியை வழங்காவிட்டால் மனிதன் பைத்தியம் பிடித்தவனாகி விடுவான்.

சில மனிதர்களிடம் இத்தகைய அதிர்ச்சிகளைச் சந்திக்கும் போது ஏற்பட்ட விளைவுகளை நாம் பார்க்கவும் செய்கிறோம். சிலருக்கு பேரதிர்ச்சிகள் ஏற்படும் போது இறைவன் மீதுள்ள நம்பிக்கை போய் விடுகிறது. சிலர் இறைவனின் எதிரியாகவே மாறி விடுகின்றனர். இந்த சிலரை இறைவன் நமக்கு காட்டும்போது நாம் அதிலிருந்து பாடம் கற்க வேண்டும். இறைவனது அருளும் பாதுகாப்பு ஏற்பாடும் இல்லை என்றால் மனிதனின் வாழ்வு நடக்கவே இயலாது. ஒவ்வொரு வினாடியும் மனித வாழ்வு அவனது அருளாலேயே நடக்கிறது.

அல்லாஹ் தனது நல்லடியார்களுக்கு இத்தொடர்பு மூலம் சிறப்பான நடைமுறையைக் காட்டுகின்றான். அவர்கள் ஒவ்வொரு நிலையிலும் இறை திருப்தியைக் கருத்தில் கொள்கின்றனர். அவர்களுக்கு அதிர்ச்சிகள் துன்பங்கள் ஏற்படுகின்ற போது **இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்** – நாம் அல்லாஹ்விடமிருந்து வந்தோம்; அவனிடமே திரும்ப உள்ளோம்) என்கின்றனர். பிறகு இதன் விளைவாக அவர்கள் அல்லாஹ்வின் கருணையை நெருங்கிக் கொண்டே செல்கின்றனர்.

ஒவ்வொரு துன்பங்களின் தீய விளைவுகளிலிருந்து இறைவன் அவர்களை பாதுகாக்கின்றான். பிறகு இறை சட்டத்தின் கீழ் அல்லாஹ்வின் பாதுகாப்பு என்ற நடைமுறை மனிதனை வந்தடைகிறது. இதில் இறைவனை ஏற்றவர் ஏற்காதவர் அனைவரும் அடங்குவர். இந்த இறைவனின் நடவடிக்கையில் இறைவனை மறுப்பவருக்கும் பாடம் இருக்கின்றது.

விஷமத்தில் நீங்கள் மேன்மேலும் முன்னேறிக் கொண்டே சென்றால் நிம்மதியை தரக்கூடிய, பாதுகாப்புத் தரக்கூடிய அந்த இறைவன் உங்களை தனது பாதுகாப்பில் எடுக்க மாட்டான். அந்நிலையில் உங்களது அழிவு நிச்சயமாகி விட்டது. பிறகு இந்த வசனத்தில் கூறுகிறான்: (13:12)

அல்லாஹ் நல்லவர்களுடன் நடந்து கொள்ளும் நடைமுறையை மாற்றுவதில்லை. நல்லடியார்கள் இறைவனின் அருளைப் பெற்றுக் கொண்டே செல்கின்றனர். அவர்களிடம் நன்மை இறைகட்டளைகளைப் பேணுதல் இருக்கும் வரை – அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகளை சரியாக அவர்கள் செய்து வரும் வரை – அடியார்களுக்கு செய்யும் கடமையை மிகச் சரியாக செய்து வரும் வரை – ஜமாஅத் அளவில் அவர்கள் நன்மையில் நிலைநிற்கும் வரை அல்லாஹ்வுடைய அருளுக்கு அவர்கள் வாரிசாகிக் கொண்டேதான் செல்வர். அல்லாஹ்வுடைய அருள் அவனது ரஹ்மத் அவனது வெகுமதிகள் எல்லாம், மனிதன் அல்லாஹ்வின் **வலி** ஆவதற்கு பதில் **ஷ**ய்த்தானை தனது வலி ஆக ஆக்கும் போது நின்றுபோய் விடுகின்றன.

நன்மைகள் நீங்கி அநீதி அம்மனிதரிடம் ஆரம்பமாகி விடுகின்றன. பிறர் உரிமைகளைப் பறிக்கத் தொடங்கி விடுகின்றார்கள். அரசு அதிகாரிகள் கையூட்டுப் பெற்று எல்லா வரம்புகளையும் மீறிவிடத் தொடங்குகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவரின் செல்வத்தின் மீது கண் வைக்கத் தொடங்குகின்றனர்.

மார்க்கத்தின் பெயரால் இரத்தம் சிந்த ஆரம்பித்து விடுவர். பிறகு அல்லாஹ் தனது பாதுகாப்பை எடுத்து விடுகின்றான்.

இந்த வசனத்தின் இப்பகுதிக்கு, அல்லாஹ் 'தீயவர்களுடனும் நல்ல முறையில் தான் நடந்து கொள்வான்' என்று ஒருபோதும் பொருளன்று. மாறாக, நற்பலன் வழங்குவது குறித்த தனது நடைமுறையை மாற்றுவதில்லை. தன்னைத்தானே அல்லாஹ்வின் அருளிலிருந்து ஒருவன் விலக்கிக் கொள்ளாதவரை இறைவனும் விலகுவதில்லை. இது அல்லாஹ்வின் நடைமுறையாகும்.

உலக வரலாறுகள் சமுதாயங்களின் முடிவுகள் குறித்து இறை நியதியின் அடிப்படையில் விளக்குவதில்லை. எனினும் மார்க்கத்தின் வரலாறுகள் இதனை நமக்கு விளக்கிக் கூறியுள்ளன. அவை சான்று பகர்கின்றன. திருக்குர்ஆன் மிகவும் தெளிவாக இவற்றை நமக்கு விளக்கிக் காட்டுகின்றது. எதுவரை மக்களிடம் தீமைகள் பிறந்து விட்டனவோ எப்போது நன்மைகள் மக்களிடமிருந்து விடைபெறத் தொடங்கி விட்டனவோ அப்போது அல்லாஹ்வின் பாதுகாப்பு போய் விடுகிறது.

நீங்கள் ஒருமுறை கலிமா சொன்னால் போதும். இறைவனின் பாதுகாப்பில் நிரந்தரமாக வந்து விடுவீர்கள் என்று அல்லாஹ் எந்த இடத்திலும் எழுதவில்லை.

மாறாக, இவ்வசனத்தில் சமுதாயத்தின் அழிவுகள் பற்றிய ஒரு அடிப்படை விதியைக் கூறி எச்சரித்துள்ளான்.

**ஆமனூ வஅமிலுஸ் ஸாலிஹாத்** என்பது அசல் நிபந்தனையாகும். (அதாவது நன்னம்பிக்கை கொண்டு அதற்கேற்ற நற்செயல் செய்ய வேண்டும்).

இந்த நிபந்தனை இந்த வசனத்தில் கூறப்படவில்லை. எனினும் எண்ணற்ற இடங்களில் திருக்குர்ஆனின் இந்த நிபந்தனை கூறப்பட்டுள்ளது. நற்செயல் அசல் நிபந்தனையாகும்.

குறிப்பாக இக்காலத்தில் முஸ்லிம் நாடுகளில் கூட அநீதி எல்லை கடந்து விட்டது. கண்ணியமிக்க நன்மக்களை கொலை செய்ய சதித்திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

எனவே இந்த வசனத்தில் கூறியுள்ள இவ்விஷயம் குறித்து இப்போது கவனம் செலுத்துவது அவசியமாகும். குறிப்பாக பாகிஸ்தானியர்கள் தவ்பா, இஸ்திஃபார் மிக அதிகமாக செய்ய வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: **வஇஸா அராதல்லாஹு பிகவ்மின் ஸுஇன் ஃபலா மர(d)த்தலஹு** - அல்லாஹ் ஒரு சமுதாயத்திற்கு தண்டனையளிக்க முடிவு செய்து விட்டால் அதனை அகற்றுபவர் எவருமில்லை. **(13:12)**

எனவே இறைவனது அந்த கடைசி தீர்ப்பு வருவதற்கு முன் நன்மையின் பக்கம் திரும்புவது அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனுக்கு உலகில் தீய செயலின் காரணமாக தண்டனை வருகிறது. ஏனெனில் இறைவன் கூறுகிறான்: ஒரு சமுதாயம் தனது அகநிலையை மாற்றாத வரை இறைவன் அந்த சமுதாயத்திற்கு தண்டனை வழங்குவதில்லை. எனவே மனிதன் தனது தீய செயல்கள் மூலம் இறை கோபத்தை தூண்டி விடுகிறான். தீய செயலின் மூலம் தனது நிலையை இறையச்சம், தக்வா, தூய்மை இவற்றின் வழியை விட்டு விடுகிறான். இறைவன் மீது ஈமான் கொள்வதை முற்றிலும் கை கழுவி விட்டான். நாத்திகம் இருள் நிறைந்த இரவு போன்று சூழ்ந்து கொண்டு விட்டது. அல்லாஹ்வின் ஒளி பொருந்திய முகத்தை இருளில் அழுத்தி விட்டான். எனவே மக்கள் தனது முகத்தை காணும் பொருட்டு இறைவன் தனது தண்டனையை இறக்கினான். மக்கள் அதன்

பக்கம் திரும்புவதற்காக இறைவன் அதனை செய்தான். எனவே இறைவனது தண்டனை எந்த வடிவத்தில் வந்தாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கிய நிலை மக்களிடம் ஏற்படும் போதுதான் வருகிறது.

பிறகு அன்னார் கூறினார்கள்: எம்மனிதர் இந்த தண்டனையிலிருந்து தப்பிக்க விரும்புகிறாரோ அவரது முதல் கடமை தன்னிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பிறகு அல்லாஹ்வும் தனது வாக்குறுதிக்கேற்ப தனது தண்டனைகள் துன்பங்கள் ஆகியவற்றை நிறுத்தி விடுகின்றான். பிறகு அம்மக்கள் தமது நன்மைகளின் காரணத்தால் இறைவனது அருளைப் பெற தொடங்கி விடுகின்றனர். அல்லாஹ்வின் வெகுமதிகள் அவர்களுக்கு இறங்குகிறது. தீமைகளின் காரணத்தால் ஏற்பட்ட இறை தண்டனையின் அறிகுறிகள் விலகிவிடுகின்றன. எனவே இது மிகவும் சிந்திக்கவும் இஸ்திக்ஃபார் – பாவமன்னிப்பு தேடவும் வேண்டிய தருணமாகும். முஸ்லிம் உம்மத் இதனை செய்ய வேண்டும். அல்லாஹ் இவர்களுக்கு அறிவைத் தருவானாக. அஹ்மதிகளும் அவர்கள் தொடர்புடைய வட்டத்தில் இதனைப் புரிய வைக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: **வமா லஹும் மின் தூனிஹீ மிவ்வால்** – அல்லாஹ்வையன்றி அவர்களின் துன்பங்களை அகற்றுபவர் எவருமில்லை. உதவி செய்பவர் எவரும் இல்லை.

எனவே இறைவனைத் தவிர பாதுகாப்பவன் இல்லை. அல்லது தனது அடியாருக்கு எதிராக நடக்கும் ஒவ்வொரு விஷமத்தையும் கண்காணிப்பவன் அவனைத் தவிர வேறு எவனும் இல்லை. எனவே அந்த இறைவனைத் தேடுவது அவசியமாகும். இறைவன் விரும்புவது எங்கு கிடைக்கும் என்று தேடுவது இக்காலத்தில் அவசியமாகும்.

தொழுகைகளை தொழுதும் அதன் விளைவு தென்படவில்லை. மாறாக அதற்கு எதிர்விளைவு காணப்படுகிறது. நோன்பு நோற்கப்படுகிறது. சமுதாய ரீதியாக அந்த கீழ்படிதலை காண முடியவில்லை. இலட்சக்கணக்கானோர் ஹஜ்ஜும் செய்கின்றனர். எனினும் எந்த முன்னேற்றமும் இல்லை. இதிலிருந்து இந்த கடமைகளை நிறைவேற்றுவதில் ஏதோ குறைவு உள்ளது என்று தெரிகிறது. அல்லாஹ் உம்மத்திற்கு இதனைப் புரிய வைப்பானாக! அவர்கள் இறைவன் பக்கம் உண்மையாக திரும்புபவர்களாவார்களாக!

**இறைவன் சூரா அன்ஃபாலில் கூறுகின்றான்:**

**ஸாலிக பிஅன்னல்லாஹ லம்யகு மு(gh)கய்யிரன் னிஃமத்தன் அன்அமஹா அலா கவ்மின் ஹத்தா யு(gh)கய்யிரூ மாபிஅன்ஃபுஸிஹிம் வஇன்னல்லாஹ ஸமீவுன் அலீம் – இதற்குக் காரணம், அல்லாஹ் ஒரு சமுதாயத்தினருக்கு அருட்கொடையினை வழங்கினால் அவர்கள் தங்கள் உள்ளங்களின் நிலைமையை மாற்றிக் கொள்ளாதவரை அந்த அருட்கொடையினை அவன் மாற்றுவதில்லை என்பதே. நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (8:54)**

இதில் அல்லாஹ் இன்னும் தெளிவாக கூறி விட்டான். ஒருவர் தனது நிலையை இறையருளிலிருந்து விலக்கிக் கொள்ளாதவரை இறைவன் தனது அருளை மாற்றுவதில்லை. அல்லாஹ் எந்த மனிதனின் அருளையும் பறிப்பதில்லை. மாறாக மனிதன் தானே, தனது செயல், துர்பாக்கியம் காரணத்தால் இந்த நிஃமத்துகளை வீணாக்கி விடுகின்றான். இவை அனைத்தும் இறைவனால் சொல்லப்பட்டவை. நம் முன்னால் திருக்குர்ஆன் இருக்கின்றது.

இவை பண்டைய காலத்து மக்களின் கதையை சொல்வதற்காக அல்ல. மாறாக முஸ்லிம்களை எச்சரிப்பதற்காக ஆகும். எத்தனை பெரிய நிஃமத் உங்களுக்கு கிடைத்துள்ளது. அதற்கு மதிப்பளிக்க வேண்டும். அந்த நிஃமத் குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு விளக்குகின்றான்.

**அத்மம்து அலைக்கும் நிஃமத்தி** – நான் எனது நிஃமத்தை முழுமையாக்கியுள்ளேன் (5:4)

இந்த நிஃமத் கடைசி ஷரீஅத்தை உடைய வேதமாகிய குர்ஆன் மூலம் நமக்கு கிடைத்துள்ளது. இதன்படி அமல் செய்யுமாறு நமக்கு கட்டளையும் இடப்பட்டுள்ளது. அதன்படி அமல் செய்யும் போது தான் நன்மைகள் நிலைநிற்கும். நன்மைகள் நிலை நிற்கும் போது இறைவனும் தனது பாதுகாப்பில் எடுத்துக்

கொள்வான். தான் எஜமானன் என்பதற்கான நிரூபணத்தையும் வழங்குவான். நான் தான் எஜமானன் என்ற காட்சியையும் காட்டுவான் என்பது இதிலிருந்து மேலும் தெரிய வருகிறது. இவர்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருந்து விலகிவிட்டனர். பிறகு மற்றவர்கள் நம்மீது ஆட்சி செய்யத் தொடங்கி விட்டனர். இப்போது கூட முஸ்லிம்களுக்கு புரியவில்லையா?

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

**குன்[த்]தும் கைர உம்மத்தின் உக்ரிஜத் லின்னாஸ்** – நீங்கள் தான் சிறந்த உம்மத். நீங்கள் மக்களுக்கு பயன் தருவதற்காக படைக்கப்பட்டுள்ளீர்கள். (3:111)

மக்களுக்கு பயன் அளிப்பதற்காக படைக்கப்பட்ட இம்மக்கள் இந்த அருளிலிருந்து தடுக்கப்பட்டுள்ளனர். ஏனெனில் தமக்குள்ளேயே துண்டிக்கப்பட்டுக் கிடக்கின்றனர். Remote Control மூலம் வெடிகுண்டுகள் வைக்கப்படுகின்றன. சில நாட்களுக்கு முன் பெஷாவரில் வெடிகுண்டு வைக்கப்பட்டு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்; சில இடங்களில் அஹ்மதிகள் மார்க்கத்தின் பெயரால் அநீதிக்கு இலக்காக்கப்படுகின்றனர். இவர்கள் மக்களுக்கு என்ன நன்மை செய்கின்றனர்? எனவே இது சிந்திக்க வேண்டிய இடமாகும். இம்மக்கள் தமது நிலையை மாற்ற வேண்டிய தேவையுள்ளது. அதுவன்றி, இறைவனது இறுதி தீர்ப்பு வந்து விட்டால் அவன் தருகின்ற முடிவைத் தடுப்பவன் எவனுமில்லை.

மற்றவரின் செயலிலிருந்து நம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அஹ்மதிகளுக்கும் இதில் பொறுப்பு உள்ளது. எப்போதும் தங்களை ஆய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் இறைவன் நேர்வழியில் செல்வதற்கு வாய்ப்பு வழங்குவான். நாம் எப்போதும் அவனது கட்டளைப்படி செல்பவர் ஆக வேண்டும். எப்போதும் நாம் நமது அமல்களின் மீது பார்வையை வைக்க வேண்டும். எப்போதும் அல்லாஹ்வின் நிஃமத்துகளுக்கு நன்றி செலுத்தி வர வேண்டும். இவையெல்லாம் நம்மிடம் வந்து விட்டால் தனது வாக்குறுதிக்கேற்ப இறைவன் நமது எஜமானனாக ஆகி விடுவான். அக்காட்சியைக் காட்டுவான். எவரும் நமக்கு நஷ்டம் இழைக்க இயலாது.

**அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகிறான்:**

**ஃபஅகீமுஸ்ஸலா[த்]த வஆ[த்]துஸ்ஸகா[த்]த வஃதஸிமூ பில்லாஹ். ஹுவமல்லா[க்]கும் ஃபனிஃமல் மவ்லா வனிஃமன்னஸீர்** – எனவே, நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள். ஸகாத்து கொடுங்கள். மேலும் அல்லாஹ்வை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அவனே உங்களின் எஜமானன்; (அவனே) மிகச் சிறந்த எஜமானனும், மிகச் சிறந்த உதவியாளனுமாவான். (22:79)

ஒரு உண்மையான மூஃமின் தொழுகையை நிலைநாட்டுவது கடமையாகும். தொழுகையை நிலைநாட்டுவதன் மூலம் தூய மாற்றம் ஏற்படும். அல்லாஹ்வுக்காக பொருள் தியாகம் செய்வதில் கவனம் செலுத்துங்கள். உங்கள் அமல்களை தூய்மை ஆக்குங்கள். அல்லாஹ்வுடைய எல்லா கட்டளைகளையும் உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள். அவனது கட்டளையின்படி அமல் செய்வதே அவனை உங்கள் எஜமானனாக ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் என்பதற்கு ஆதாரமாகும். அவனே நமது இறைவனாவான்.

**இதைப்பற்றி திருக்குர்ஆன் சூரா மாயிதாவில் வருகிறது:**

**இன்னமா வலிய்யு[க்]குமுல்லாஹு வரஸூலுஹூ வல்லஸீன ஆமனுல்லஸீன யகீமூனஸ்ஸலா[த்]த வயுஃதூனஸ்ஸகா[த்]த வஹும் ராகிவூன். வமய்ய[த்]தவல்லாஹு வரஸூலுஹூ வல்லஸீன ஆமனூ ஃபஇன்னஹிஸ்புல்லாஹி ஹுமுல் [g]காலிபூன்** – உங்கள் நண்பர் அல்லாஹ்வும் அவனது தூதரும், மேலும் தொழுகையினை நிலைநாட்டியும், ஸக்காத்துக் கொடுத்தும் வரும் நம்பிக்கையாளர்களுமாவர். அவர்கள் இறைவனிடம் குனிந்தவராயும் இருப்பர். அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும், நம்பிக்கை கொண்டவர்களையும் தங்கள் நண்பர்களாகக் கொள்கின்றவர்கள், நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினரே. அவர்களே நிச்சயமாக வெற்றி பெறுவர். (5:56-57)

முதல் வசனத்தில் **ராகிவூன்** – குனிபவர்கள் என்ற சொல் வந்துள்ளது. அதன் பொருள், களங்கமற்ற முறையில் இறைவனுக்கே இபாதத் செய்பவர்கள், களங்கமற்ற முறையில் அவன் முன் குனிந்தவாறு, அவனே எல்லாம் என்று கருதியவாறு, எந்தவகை **ஷி**ர்க்கின் கலப்படமும் தமது மார்க்கத்தில் இணைக்காதவர்களாக இருக்கும் அத்தகைய மக்களுக்கு இறைவன் வலி ஆகிவிடுகின்றன. இதுவே மூஃமினுடைய ஜமாஅத் இந்த ஜமாஅத்திற்கு வெற்றி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அல்லாஹ் இவர்களின் நண்பன் அல்லாஹ் எவருக்கு நண்பனாக இருக்கின்றானோ அவர்களை நிச்சயமாக வெற்றி பெறச் செய்து விடுகிறான்.

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறுகிறான். எவர் எனது **வலி** ஐ பகைத்துக் கொண்டாரோ நான் அவருடன் ஒரு போர் பிரகடனம் செய்து விட்டேன். இது ஹதீஸே குத்ஸி ஆகும். எனது அடியான் தனது கடமைகளைச் செய்து எனது நெருக்கத்தைப் பெற முயற்சி செய்வது எனக்கு மிகவும் பிடித்த ஒன்றாகும். என்ன கடமைகள் உள்ளன என்று தெரிவதற்கு திருக்குர்ஆனில் தேட வேண்டும். முதலில் தொழுகை. எனது அடியான் நஃபில்கள் மூலமாக என்னை நெருங்குகின்றான். எந்த அளவுக்கு நெருங்கி விடுகிறான் எனில் நான் அவர்களை நேசிக்கின்றேன். நான் அவர்களை நேசித்தால் பிறகு அவர்கள் கேட்கின்ற காதாகவும், அவர்கள் பார்க்கின்ற கண்ணாகவும், அவர்கள் பிடிக்கின்ற கையாகவும், அவர்கள் நடக்கின்ற காலாகவும் ஆகி விடுகின்றனர். எதனை அவர்கள் என்னிடம் கேட்டார்களோ அதனை நான் தருவேன். அவர்கள் எனது அடைக்கலத்தை நாடினால் நிச்சயமாக தருவேன். ஒரு மூஃமினின் உயிரை வாங்கும் போது ஏற்படும் வேதனை எனக்கு வேறு எதிலும் ஏற்படுவதில்லை. அவர்களுக்கு மரணம் தருவது எனக்கு விருப்பமில்லாதது போன்று அவர்களுக்கு துன்பம் தருவதும் எனக்கு விருப்பமில்லாதது ஆகும். அல்லாஹ் இவ்வாறு தனது அடியார்களை கவனிக்கின்றான். களங்கமற்ற முறையில் அல்லாஹ்வின் முன் குனிந்து அவனது கடமைகளை நிறைவேற்றினால், அவனது கட்டளைகளை அமல் செய்தால், தக்வாவை கவனத்தில் கொண்டால் அத்தகைய மக்களை அல்லாஹ் தனது பொறுப்பில் எடுத்துக் கொள்கிறான். அம்மக்களின் ஒவ்வொரு செயலிலும் அல்லாஹ் கூடவே இருக்கின்றான். நாம் நன்மையில் அடி எடுத்து வைத்தவாறு நமது உண்மையான எஜமானன் முன் இணைந்திருப்போமாக. அதன் மூலம் ஒவ்வொரு வினாடியும் இறைவனது உதவி ஒத்தாசைகளைப் பார்ப்போமாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 30.10.2009**

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**